முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *தேவைப்பட்டால் கன்னியாகுமரி மாவட்டத்திலும் நெல் வரத்து இருக்குமேயானால், நிச்சயமாக, உறுதியாக அந்த* relaxation *வாங்கிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இந்தக் கேள்விக்குத் தொடர்பில்லாத இன்னொரு கேள்வியையும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். என்னுடைய துறை சார்ந்த கேள்வி என்பதால் அதற்குப் பதில் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் செயல்படுகிற அங்காடிகளில் பணியாளர் பற்றாக்குறை என்று சொன்னார்கள். தமிழ்நாடு முழுவதும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் 1,440 அங்காடிகள்தான் செயல்படுகின்றன; அதில் ஆயிரக்கணக்கான ஊழியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னார்கள்; அதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அந்த இடத்தில் உடனடியாகப் பணியாளர்களை நியமித்து, அங்கு அப்பணிகள் தொய்வின்றி நடக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

ஜவுளிப் பூங்கா

*22132—திரு. ஏ.கே. போஸ்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, நிலையூர் கைத்தறி நகரில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2017 ஜூன் 23]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பரங்குன்றம் தொகுதி, நிலையூர் கைத்தறி நகரில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என திருப்பரங்குன்றம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். திருப்பரங்குன்றம் தொகுதி, நிலையூர் கைத்தறி நகரில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் அப்பகுதியில் உள்ள தொழில்முனைவோர் முன்வருவார்களாயின் நடைமுறையிலுள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ், இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கும் முன்பே வரம் தரும் அன்புத் தாய்! தமிழக மக்களின் நலனுக்காகத் தீபமாய் ஒளிவீசி மெழுகாய் கரைந்து நின்றவர் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலின் ஓரம் துயில் கொண்டிருக்கும் எங்கள் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிவந்த தியாகத் தலைவி கழகப் பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியைத் தொடர்ந்து செவ்வனே நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட நிலையூர் கைத்தறி நகர் அதிகமான நெசவாளர்கள் வசிக்கும் பகுதி என்பதால், அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைப்பது அப்பகுதி நெசவாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, அரசு இந்த முடிவை மறுபரிசீலனை செய்து, அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளிப் பூங்கா அமைக்க குறைந்தபட்சம் 25 ஏக்கர் நிலமும் மற்றும் 50 தொழிற்கூடங்களும் வேண்டும். இவ்வாறு அமையும் ஜவுளிப் பூங்காவின் திட்ட மதிப்பீடு குறைந்தபட்சம் 60 கோடி ரூபாய் முதல் 65 கோடி ரூபாயாக இருக்கிறது. இதில் மைய அரசு 40 சதவீதம் அல்லது ரூபாய் 40 கோடி நிதி தருகிறது. மாநில அரசு 9 சதவீதம் அல்லது ரூபாய் 9 கோடி நிதி தருகிறது. தொழில்முனைவோர் 51 சதவீத முதலீட்டைக் கொடுக்க வேண்டும். வங்கிக் கடன் மூலமாகவோ அல்லது சுயமுயற்சியின் மூலமாகவோ கொடுப்பார்களென்று சொன்னால், அதற்கு முன்வருவார்களென்று சொன்னால், ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே சௌராஷ்டிரா சமூக நெசவாளர்கள் அதிகமாக வசிப்பதாலும், நெசவுத் தொழிலை மட்டுமே அவர்கள் நம்பியிருப்பதாலும், வேறு எந்தத் தொழிலும் தெரியாத காரணத்தாலும் அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைப்பதன்மூலம் ஆண்டு முழுவதும் அப்பகுதி மக்கள் தொழில் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். அங்கே அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. பணம் வேண்டுமென்றால் அவர்கள் கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, சிறுபான்மையின மக்கள் நலன் கருதி, இத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி பிரேரணை வந்து சேருமாயின், அது பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றித் தரப்படும் என்பதை*

2017 ஜூன் 23]
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

வீட்டுமனைப் பட்டா

***6103**—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி, 58-வது வட்டம், செட்டியார் தோட்டம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், உப்பிலிபாளையம் கிராமம், 58-வது வட்டம், செட்டியார் தோட்டம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சுமார் 200 குடும்பத்தினர் வசித்து வரும் புலமான க.ச. எண் 365 காலையானது தனிநபருக்குப் பாத்தியப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சிக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் உரிய அனுமதி பெற்று, மேற்கண்ட காலையில் வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சி, 58-வது வட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட நீலிக்கோணாம்பாளையம், செட்டியார் தோட்டம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் கடந்த 40 ஆண்டு காலமாக*